ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 6 மார்ச்சு 1944 நெ. 12

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.எ.

எஸ். சத்தியநாராயணு.

எடிடர்.

ஸ்ரீமான்

வி. விய்யன்னு, பி.எ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்—

காலஞ்சென்ற ஸ்ரீ. வி. ராமதாஸ் பந்துலு ... 87

இலவச விவசாய பத்திரிகை ... 88

1944-45 வருஷத்திய சென்னை பட்ஜெட்டு ... 88

2. யுத்தத்திற்குப்பின் நிர்மாண திட்டங்கள்—ஆஸ்டின் துரை அவர்களின் பிரசங்கம் ... 91

3. சென்னை ஹைகோர்ட்டு தீர்ப்பு ... 93

4. சென்னை மாகாணத்தில் விவசாய நிலைமை ... 94

5. குடியேறும் சங்கங்களுக்கு அதிக உதவி ... 95

6. சென்னை பட்ஜெட் குறிப்புகள் (1944-45) ... 96

7. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 97


---





கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை,

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

The Village Panchayat Journal.

VOL. VI] MARCH 1944 [No. 12

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

---

## The Late Mr. V. Ramadas Pantulu

The loss that the country has sustained by the death of Mr. V. Ramadas Pantulu is very great. If the Madras Province stood first in Co-operative finance and the Provincial Co operative Bank has been the strongest in the country, the credit should go to him mainly. As a non-official Co-operative leader he stood head and ears above others in the land, having represented India at International Co-operative functions, having guided the highest Co-operative bodies in India and having edited one of the best Co-operative journals in the world. For this creditable achievement in a single field his name deserves to go down to posterity as a great son of the country. His untiring work and indefatigable energy were the secrets of his success together with his keen capacity to distinguish the practical from the unattainable. To the service he rendered to Co-operation he added many other activities. His interest in all rural matters was great, more especially in the village Panchayats. He was connected with the panchayat movement from the start, being the President of the Madras Provincial Union of Panchayat Boards for long. He was responsible for the first Panchayat Journal conducted under the auspices of a Public institution, the Madras Provincial Co-operative Union, and it was with him as one of the first sponsors that our union has run this journal. We are, therefore, particularly grieved that we should have lost one of our best supporters. In other fields like the Congress movement and the Andhra movement his contributions were great. We convey our heartfelt condolences to his family and pray that his soul may rest in peace.

---

## A free Agricultural Journal.

In pursuance of the Grow More Food Campaign, the Madras Government have directed that the Agricultural Department should publish. with the co-operation of the other departments, a monthly journal in Tamil and Telugu, mainly dealing with agricultural topics but including also other technicalities of village life like public health and co-operation. We are told the journal will contain

not more than 15 to 20 pages of Royal Octavo: It will be distributed free to selected villages and agricultural associations, reading rooms, libraries and selected schools. The local agricultural demonstrator and the district agricultural officers are expected to ensure that the copies reach the people intended and are put to the best use. They are expected to arrange for the reading of the journal to villagers at the time of their congregations.

We extend welcome to this new attempt of the Government of Madras in the hope that it shall have a better prospect of being utilised for the benefit of the villager than the stray leaflets of the Agricultural and other departments which were very little used by people for whom they were intended; for, there was no organisation for the proper broadcasting of the printed material sent out.

---

## The Madras Budget for 1944-45.

The Government of Madras have published a *Communique* explaining briefly the financial position of the province and the most important features of the budget for the year 1944–45.

The Revenue for the year 1944–45 is estimated at Rs. 3,020.33 lakhs and the expenditure at Rs. 2,375.97 lakhs leaving a net surplus of 644 lakhs.

Out of the surplus, provision has been made for a net expenditure of Rs. 89·64 lakhs on new schemes, including additional compensation to local bodies for loss of revenue from tolls and profession tax amounting to 45 lakhs.

Among the new schemes for which provision is made in the budget are: grants to the Madras University for new technological courses, opening of Honours courses in Islamic History and Culture and the Natural Science Group of the Intermediate course in the Government Muhammadan College, additional grants to aided elementary schools and panchayats for payment of increased dearness allowance; extension of rice research stations; a special provision of Rs. 2 lakhs for the extension to all Labour Department schools of free midday meals for pupils.

After providing for new schemes and transferring Rs. 554 lakhs to the Revenue Reserve Fund for post-war reconstruction and development schemes, a small surplus of Rs. 77 lakhs is left.

The Government hint at the possibility of the Madras Tobacco Act being repealed in view of the levy of an excise duty on tobacco by the Central Government.

Discouraging any hope that might be entertained of a possible reduction in taxation, the Government state that "it is essential to maintain substantially the existing level of taxation in Madras for the period of the war, so that this Province will have considerable funds in hand for undertaking large development schemes after the war."

The budget on the receipts side takes credit, we are told, for the additional revenue from (1) withdrawal of the land revenue concessions from fasli 1353 (2) from the additional taxation measures

introduced in the current year namely, the increases in registration fees, stamp duties, betting tax, and the general sales tax and (3) the partial suspension of prohibition. The people have very little to appreciate in a budget which withdraws benefits like land revenue concession and prohibition, retains additional taxes and shows a surplus of over 6 crores. Though the Government of Madras tell us that most of the big surplus (554 lakhs) will be transferred to Revenue Reserve Fund to finance schemes of post war reconstruction and development and give categories of expenditure the intension of this big surplus is clear from another context.

There are a few features of the budget that are satisfactory in an otherwise unsatisfactory budget. Local bodies have the fullest contribution the Government could give in lieu of lost toll income. They are fairly repaid the trouble they have suffered from past vagaries. It is to be hoped that the district boards will now restore their share of grants to Panchayats for Panchayat Roads. It is to be regretted that no specific provision appears to have been made for grants to Panchayats under this head. Provision has also been made for a contribution of Rs. 10 lakhs to the fund for the development of rural water-supply. It is doubtful whether this will be effective in application. For, there have been very definite statements by Government that stores for such schemes of development are difficult to obtain. Under education we have 12 lakhs provided for new schemes. What the Panchayats get out of it is only assistance for payment of dearness allowance to teachers at a monthly rate of Rs. 4 instead of Rs. 3. Nothing appears to have been provided for grants to Panchayat Libraries. We see there is a grant to be made for the training of Co-operative Panchayatdars. It is allright so far as it goes. But what about the training of members of village Panchayats? We had hoped that this subject would receive consideration because of the extensive talk of reconstruction after the war. How is that reconstruction possible without the village administrative unit being well manned? It is gratifying that Rs. 2 lakhs is set apart for the extension to all labor department schools of free midday meals for pupils. May we not ask that the same facility should be extended to poor children in Panchayat schools also.

It is none too late now. Not much harm will accrue by reduction of even lakhs from the huge reserve that is left over. Postwar reconstruction can only be built on the foundations laid in the village. The demobilised army personnel must also become part of our enlivened villages They should not be made either to get isolated or sent to villages where they may feel ill at ease. So, we earnestly hope that the Madras Government will give the best assistance they may, even under the present difficult conditions, to the Village Panchayats and help them to make villages more agreeable to modern conceptions of better living.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 6 | மார்ச்சு, 1944 | No. 12 |
|---|---|---|


நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபால் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### காலஞ்சென்ற ஸ்ரீ வி. ராமதாஸ் பந்துலு.

V. ராமதாஸ் பந்துலுவின் மரணத்தினால் நம் தேசம் பெருத்த நஷ்டத்தை அடைந்திருக்கிறது. சென்னை மாகாணம் கூட்டுறவு விஷயங்களில் முதன்மை ஸ்தாபனம் வகிப்பதும், மாகாண கூட்டுறவு பாங்கியானது இத்தேசத்திலேயே மிகவும் திடமாகவும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதும் அவர் செய்த முயற்சியின் பலன்களேயாகும். கூட்டுறவு இயக்கத்தில் உத்தியோகப் பற்றற்ற தலைவர்களுள் நம் தேசத்தில் அவருக்கு இணையாக ஒருவரும் கிடையாது. அவர் சர்வ தேச கூட்டுறவு மகாநாடுகளுக்கு நம் தேச பிரதிநிதியாக சென்றிருக்கிறார். நம் தேசத்தில் எத்தனையோ பெரிய கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு வழிகாட்டியிருக்கிறார். உலகத்திலேயே மேன்மையான கூட்டுறவு பத்திரிகைகளில் ஒன்றாகிய பத்திரிகையை நடத்தி வந்தார். இந்த ஒரு கைங்கர்யத்திற்கே நம் தேசத்தின் தலைமுறைகள் அவருடைய சேவைக்கு மிக்க கடமை பட்டவைகளாக இருக்க வேண்டும். அவருடைய வெற்றிக்கு அவர் சலியா உழைப்பும், திடபிரயாஸையும், கைக்கூடியதை அறிந்து கை கூடாததை விட்டு விலகத் தெரிந்த ஸூக்ஷ்ம புத்தியே முக்கிய காரணங்கள். கூட்டுறவு இயக்கத்தோடு கூட இன்னும் பல துறைகளில் அவர் சேவை செய்திருக்கிறார். அவருக்கு எல்லா கிராம பிரச்னைகளிலும் அதுவும் முக்கியமாக கிராம பஞ்சாயத்து விஷயங்களில்—ஊக்கம் அதிகம். அவர் ஆதிகாலந்தொட்டு பஞ்சாயத்து

இயக்கத்தில் சம்பந்தப்பட்டிருந்தார். வெகு காலம் அவர் மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் சங்கத்திற்கு தலைவராக இருந்தார். சென்னை மாகாண கோவாபரேடிவ் சங்கத்தின் ஆதரவில் அவர்தான் முதல் முதலில் பஞ்சாயத்து பத்திரிகை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தார். அவர் ஆதரித்துதான் நம் சங்கமும் இந்த பத்திரிகையை ஆரம்பித்து நடத்தியது. இப்படிப்பட்ட பெரிய துணைவராக இருந்தவரை இழந்ததில் நம் வருத்தம் சொல்லிமுடியாது. காங்கிரஸ் ஆந்திர இயக்கங்களிலும் அவர் அரிய சேவை செய்திருக்கிறார். அவருடைய குடும்பத்திற்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம் அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும்

---

## இலவச விவசாய பத்திரிகை.

அதிக ஆகாரப்பொருள் உற்பத்தி இயக்கத்தை அனுசரித்து, தமிழிலும், தெலுங்கிலும், முக்கியமாக விவசாய விஷயங்களையும், அதோடு இதர சுகாதார, கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களைக் குறித்தும் ஒரு மாத பத்திரிகையை விவசாய இலாகா இதர இலாகாக்களின் ஒத்துழைப்புடன் நடத்தும்படி சென்னை கவர்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது 15, 20 ஆக்டவோ பக்கங்கள் கொண்டதாக இருக்கும். அது பொறுக்கியெடுக்கப்பட்ட கிராமங்களுக்கும், விவசாய சங்கங்களுக்கும், வாசகசாலைகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் இலவசமாக வழங்கப்படும். அது சரிவர உபயோகித்துவரும் விஷயத்தை கவனிக்கும்படி விவசாய டிமான்ஸ்ட்ரேடர்களும், ஜில்லா விவசாய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கிராம ஜனங்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்களில் அவர்கள் அதை ஜனங்களுக்கு வாசித்துச் சொல்லுவார்கள்.

இதுகாறும் அப்போதைக்கப்போது வெளியிடப்பட்டு வந்த கவர்மெண்டு துண்டு பிரசுரங்களைக் காட்டிலும், இந்த பத்திரிகை கிராம ஜனங்களுக்கு அதிக நன்மை செய்யும் என்ற நம்பிக்கையில் நாம் இம்முயற்சியை வரவேற்கிறோம்.

---

## 1944-45ம் வருஷத்திய சென்னை பட்ஜெட்டு

மாகாணத்தின் 1944-45ம் பட்ஜெட்டைக்குறித்து சென்னை கவர்மெண்டார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

1944-45 இல் வருமானம் 3,020·33 லக்ஷ ரூபாய்களும் செலவு 2,375·97 லக்ஷமும், நிகர மிச்சம் 644 லக்ஷம் ரூபாய்களும் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மிச்சத்திலிருந்து 89·64 லக்ஷம் ரூபாய்—ஸ்தல ஸ்தாபனங்கள் சுங்க வரி, தொழில் வரி இவைகளை இழந்ததிற்கு ஈடாக 45 லக்ஷம் உள்பட—புதிய திட்டங்களுக்கு உபயோகப்படுத்தப்படும்.

பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கும் புதிய திட்டங்களாவன : தொழில் கல்வி கல்வியளிப்பதற்கு புதிய ஏற்பாடு செய்ய சென்னை யூனிவர்சிடிக்கும், கவர்மெண்டு மகமத்திய காலேஜில் இஸ்லாமிய சரித்திரம், கலைவளர்ச் சிகளில் ஹானர்ஸ் வகுப்புகள் ஆரம்பிக்கவும், இன்டர்மீடியட் வகுப் பில் இயற்கை பாடவகுப்பு ஆரம்பிக்கவும், சகாயம் பெற்று நடத்தப்படும் ஆரம்பக்கல்வி பள்ளிக்கூடங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும், உபாத் தியாயர்களுக்கு அதிக பஞ்சப்படி கொடுக்க சகாயமும் அரிசி ஆராய்ச்சி சாலைகளை அதிகப்படுத்தவும் எல்லா லேபர் இலாகா பள்ளிக்கூடங்களிலும் பையன்களுக்கு இலவச மத்தியான ஆகாரம் கொடுக்கவும்—உதவி செய்ய திட்டம்போடப்பட்டிருக்கிறது.

புதிய திட்டங்களுக்கு செலவு, யுத்தத்திற்குப் பின் நிர்மாண வேலை களுக்கு ரெவினியூ ரிசர்வு நிதிக்கு 554 லக்ஷம் ரூபாய் மாற்றினது போக, மிஞ்சும் தொகை 77 லக்ஷம் ரூபாய்.

மத்திய கவர்மெண்டு புகையிலை வரி விதித்திருப்பதால், சென்னை கவர்மெண்டார் புகையிலை வரியை ரத்து செய்யலாம் என்ற சூசனங்கள் தென்படுகின்றன.

வரி பளுவு குறைக்கப்படும் என்ற நம்பிக்கைக்கு இடம் தராமல், "யுத்தத்திற்குப் பின் செய்யவேண்டிய நிர்மாண வேலைகளுக்கு பணம் தேவையாக இருக்குமாதலின், தற்சமயம் விதிக்கப்படும் வரி அளவை குறைப்பதற்கில்லை" என்று தெரிவித்திருக்கிறார்கள்.

வருமானத்தில் 1353 பசலி முதல் வரி வஜாவை ரத்து செய்தால் கிடைக்கும் அதிகப்படி வருமானமும் (2) ஸ்டாம்பு, ரிஜிஸ்ட்ரேஷன் கட் டணங்களின் உயர்வு, பந்தய வரி, பொது விற்பனை வரி, இவைகளிலிருந்து கிடைக்கும் அதிக வருமானமும், (3) மது விலக்கு ரத்து செய்யப்பட்ட தால் கிடைக்கும் அதிக வருமானமும், கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட் டிருக்கிறது.

வரி வஜா, மது விலக்கு முதலிய ஜனங்களுக்கு நன்மை கொடுக்கு அம்சங்கள் எடுக்கப்பட்டு, அதிக வரி பளுவை அப்படி வைத்து, 6 கோடி மிச்சம் காண்பிக்கும் வரவு செலவு கணக்கை பொது ஜனங்கள் மெச்ச முடியாது. இந்தப் பெரிய மிச்சமான தொகை (554 லக்ஷ ரூபாய்) நிர்மாணமான வேலைகளுக்காக ரெவினியூ ரிசர்வு நிதிக்கு மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், இந்தப் பெரிய மிச்சத்தின் உள் நோக்கம் மற்றொரு சந்தர்ப்பத்தைக் கவனித்தால் புலன்படும்.

இந்த பட்ஜெட்டின் சில அம்சங்கள் திருப்திகரமானதாகத்தானிருக் கின்றன. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சுங்க வரி—நஷ்ட ஈடாக கொடுக்க வேண்டிய பூரா தொகையும் கொடுக்கப்படுகிறது. சில காலமாக அவைகள் பட்ட கஷ்டங்கள் தீரும். பஞ்சாயத்து ரோடுகளுக்கு ஜில்லா போர்டுகள் கொடுத்து வந்த உதவி மறுபடி அமுலுக்கு கொண்டுவரப்படும் என எதிர்

பார்க்கலாம். இதைக்குறித்து பஞ்சாயத்துகளுக்கு பிரத்யேகமாக கொடுப்பதைப்பற்றி பிரஸ்தாபம் இல்லாமலிருப்பது வருந்தத்தக்கது. கிராம பிரதேசங்களில் ஜல சப்ளை திட்டத்திற்கு 10 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்படும். இது நடைமுறையில் பயனளிக்குமா என்பது சந்தேகம். ஏனெனில் இத்திட்டங்களுக்குத் தேவையான சாமான்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கல்விக்காக புதிய திட்டங்களுக்கு 12 லக்ஷம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் உபாத்தியாயர்களின் பஞ்சப்படியை 3 இலிருந்து 4 ரூபாய்க்கு உயர்த்துவதற்காக மட்டும் பஞ்சாயத்துகளுக்கு உதவி செய்யப்படும். பஞ்சாயத்து புத்தக சாலைகளுக்கு ஒரு உதவியும் இல்லை. பஞ்சாயத்தார்களுக்கு பயிற்சியளிக்க சகாயம் செய்யப்படும் என்பதை கவனித்தோம். அது சரிதான். கிராம பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கு பயிற்சி யளிப்பதைப் பற்றி என்ன? இது பற்றி கவனிக்கப்படும் என்று நம்பினேம். கிராம ஸ்தாபனத்தில் சரியான ஆள்கள் இல்லாமல் யுத்தத்திற்குப் பின் ஏற்படும் நிர்மாண வேலைகள் எப்படி சாத்தியப்படும். லேபர் இலாகா பள்ளிச் சிறுவர்களின் பகல் போஜனத்திற்கு 2 லக்ஷம் ரூபாய் உதவியளிப்பது பற்றி சந்தோஷம். இதே மாதிரி பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களிலிருக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கும் கொடுக்கக்கூடாதா.

இப்போதும் காலதாமதமாகவில்லை குவிந்து கிடக்கும் ரிசர்வு நிதியிலிருந்து லக்ஷங்களாக எடுத்தாலும், ஒன்றும் முழுகிப் போய்விடாது. கிராமத்தில் போட்ட அஸ்திவாரத்தின் பேரில்தான் புனர் நிர்மாண திட்டம் நிற்கும். பட்டாளத்திலிருந்து திரும்பி வரும் ஜனங்கள் புத்துயிர் பெற்ற நம் கிராம வாழ்க்கையில் ஈடுபட வேண்டும். அவர்களை தனிப்பட்டு வாழும்படியோ அவர்கள் விரும்பாத வாழ்க்கைக்கோ அனுப்பக்கூடாது. ஆகையால் இந்த நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் கூட கவர்மெண்டார் தங்களால் இயன்ற உதவியை பஞ்சாயத்துகளுக்கு அளித்து கிராமங்களுக்கு நன்மை செய்யும்படி நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# யுத்தத்திற்குப்பின் நிர்மாண திட்டங்கள்—ஆஸ்டின் துரை அவர்களின் பிரசங்கம்.

---

கனம் T. ஆஸ்டின் ஒரு பிரசங்கத்தில் சொன்னதாவது :—

வருங்காலத்தில் எழுத்தறிவின்மையை போக்கவும் எழுத்தறிவுள்ள வாக்காளர்கள் ஏற்படவும் தீவிர முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்

சமீப காலம் வரையில் சரியான கல்வி பட்டணப் பிரதேசங்களிலும், அதைப் போன்ற மற்ற பிரதேசங்களில் மாத்திரமே போதிக்கப்பட்டு வந்தது. அதிருஷ்டவசமாக இப்போது அந்த நிலமை மாறி வருகிறது. ஆனல் யுத்தத்திற்குப்பின் கிராமாந்திர பிரதேசங்களில் இந்த கல்வியை இன்னும் அதிகமாக பறப்ப ஆவல் கொள்ளவேண்டும்.

பொதுவாக பொது மக்கள் கல்வி விஷயமாக சென்ற ஏழு வருஷ காலத்தில் ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கும் பூர்த்தியாக ஐந்து வகுப்புகள் வேண்டும் என்ற கொள்கை நிறைவேற்றி வைக்கப்பட்டது. யுத்தத்திற்கு பின் மேலும் ஒரு வகுப்பு சேர்த்து ஆரம்ப பள்ளிக்கூடத்தில் ஆறு வகுப்புகள் ஏற்படுத்துவதைப் பற்றி யோசிக்க சாத்தியமாகும்.

லாபமற்றதும், உபயோகமற்றதும், அனுவசியமானதுமான பள்ளிக்கூடங்களை எடுத்தபின், இன்னும் அதிக விஸ்தாரமாக கட்டாய கல்வியை அமுலுக்குக் கொண்டுவரவேண்டியது அடுத்த வேலை. யுத்தத்திற்குப்பின் செய்யவேண்டிய பெரிய கல்வி சீர்திருத்தம் இது. இதற்கு அதிக செலவு பிடிக்கலாம். ஆனல் சென்னையில் யுத்தத்திற்குப்பின் கட்டாய கல்வியை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் தயார் செய்யப்பட்டுவிட்டன. சில வருஷங்களுக்கு முன்பே கட்டாய கல்வி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தால் ஏற்பட்டிருக்கும் அதிக செலவைவிட யுத்தத்திற்குப்பின் அமுலுக்குக் கொண்டு வருவதால் அதைவிட குறைவாகத்தான் ஆகும். இது விஷயத்தில் பொது ஜனங்கள் கவர்மெண்டாருடன் பூரணமாக ஒத்துழைக்கவேண்டும்.

பள்ளிக்கூடங்களில் சரிவர வைத்திய பரிசை இருக்கவேண்டும். அதற்கு நம் மாகாணத்தில் 1,400 டாக்டர்கள் தேவையாக இருக்கும் என கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகையால் வைத்திய இலாகா அதிகாரிகளும் கல்வி இலாகா அதிகாரிகளும் இது விஷயமாக ஒத்துழைத்து முயற்சி செய்யவேண்டும்.

பெண்கள் கல்வி அபரிமிதமாக முன்னேற்றமடைந்திருக்கிறது. யுத்தத்திற்குப்பின் இது இன்னும் அதிகரிக்கும்.

யுத்தம் காரணமாக தொழிற்சாலைகள் விருத்தியடைந்திருக்கின்றன. எதிர்கால தேவைகளுக்காக தொழில் கல்வி விஷயமாக அதிக கவனம் செலுத்தப்பட்டு திட்டம் வகுக்கப்படவேண்டும். ஆகாய போக்குவரத்து முதலிய புதிய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள தயாராக இருக்கவேண்டும்.

## வைத்திய வசதிகள்.

வைத்திய வசதிகள் பரவவேண்டும். ஒவ்வொரு ரெவினியூ கிராமத்திற்கும் வந்து பார்த்துப்போகும் ஒரு டாக்டரும், ஒவ்வொரு கிராமத்தின் 2, 3 மைல் தூரத்திற்குள் ஒரு மருந்துசாலையும், 5, 6 மைல் தூரத்திற்குள் ஒரு ஆஸ்பத்திரி இருக்கவும் ஏற்படும்படி செய்வது நோக்கமாக இருக்கவேண்டும். வைத்திய சிகிச்சையை விவரித்து செய்யவும், குஷ்டரோய் வியாதிஸ்தர்கள் விடுதிகள் ஏற்படுத்தவும் திட்டம் வகுக்கவேண்டும். கண்ட இடங்களில் மலஜலங்கள் கழிப்பதை தடுக்க ஒவ்வொரு கிராமத்திலும் தகுந்த வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் பாதுகாக்கப்பட்ட ஜல சப்ளை திட்டமும், குடியிருக்க மேன்மையான வீடுகளும் ஏற்பாடு செய்யவேண்டும்.

எல்லா நகரப் பிரதேசங்களிலும், ஜன நெருக்கமான இடங்களில் குடிசைகளில் வசிப்பவர்களுடைய சௌகர்யங்களுக்காக செய்ய வேண்டியது அதிகம் இருக்கிறது.

ஜனங்களின் தேக புஷ்டியை அபிவிருத்தி செய்வதைப்பற்றியும் கவனிக்க வேண்டும். கால்நடைகள் விருத்தி செய்வதும், மேய்ப்பு நிலங்களை அதிகப்படுத்தியும், பால் பண்ணை ஸ்தாபித்தும், பால் உற்பத்தியையும் உட்கொள்ளுதலையும் அதிகப்படுத்தவேண்டும். எல்லா சுகாதார இலாகா சிப்பந்திகளும், பொறுக்கியெடுத்த விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும் புஷ்டி அதிகரிக்கும் வேலைகளில் பயிற்சி பெற்றால் மிகவும் நல்லது.

ஆகார சுத்தத்தை காக்க, எல்லா ஆகார தினுசுகளுக்கும் 'அக் மார்க்கு' முத்திரை போடவும், எல்லா முக்கியமான கிராம பிரதேசங்களிலும் கலப்பு தடுக்கும் மசோதாவை அமுலுக்கு கொண்டுவரவும், பலவிடங்களிலும் ஆகார பதார்த்தங்களின் சுத்தத்தை சீக்கிரமாகவும் சௌகர்யமாகவும் பரிசை செய்து பார்க்க பரிசை சாலைகள் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் 2, 3 மைல் தூரத்தில் ஸ்தாபிக்கப்படும் மருந்துசாலையை ஒட்டினாற்போல், மருத்துவ, சிசு சம்ரக்ஷண ஆஸ்பத்திரி இருக்கவேண்டும்.

மொத்தத்தில் பொதுஜன ஆரோக்ய திட்டங்கள் மேன்மையானதாகவும், விஸ்தரித்தும் சீர்திருத்தம் செய்வது மிக அவசியம்.

மாகாணம் முழுவதற்கும், எல்லா முனிசிபாலிடிகளுக்கும் 10,000 ஜனத்தொகைக்கு அதிகப்பட்ட பஞ்சாயத்துகளுக்கும் காப்பாற்றப்பட்ட ஜல சப்ளை கொடுக்க பெரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

# சென்னை ஹைகோர்ட்டு தீர்ப்பு.

பஞ்சாயத்து சட்ட சம்பந்தமான வழக்கு சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீலில் வந்து Cr.R.C. No. 483 of 1943-இல் தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கின் விவரங்களாவன:

காவலிபுரம் பஞ்சாயத்து போர்டு தலைவர், தனக்கு முன் தலைவராக இருந்தவர் பஞ்சாயத்து தஸ்தாவேஜிகளை தன் வசம் ஒப்புவிக்க தவறியதற்காக தணுகு சப்மாஜிஸ்ட்ரேட்டு கோர்டில் ஒரு பிராது தாக்கல் செய்தார். அந்த கோர்டில் பிரதிவாதி சட்டப்படி ரிகார்டுகளை வாதியிடம் ஒப்படைக்க கடமைபட்டவர் என்று சொல்லி அப்படி செய்யத்தவறியதற்காக இந்திய பினல் கோடு 175-வது செக்ஷன்படி குற்றம் செய்தவராவார் என்று அபிப்பிராயப்பட்டு, அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அதன் பேரில் ஜாயிண்டு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்பீல் செய்துக்கொண்டதின்பேரில், அவர் ஷை பிரதிவாதி அந்த செக்ஷன்படி ரிகார்டுகளை ஒப்புவிக்க கடமைபட்டவர் என்று ருஜிவாகவில்லையென்றும், அவரிடம் அந்த ரிகார்டுகள் இருந்தனவா என்பது சந்தேகமாகயிருக்கிறதென்றும் அபிப்பிராயப்பட்டு, விதிக்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப்பட்டது. பஞ்சாயத்து போர்டு இதன்பேரில் ஹைகோர்டுக்கு அப்பீல் செய்தது.

சட்டப்படி பழைய பிரசிடெண்டு ரிகார்டுகளை வாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்பது ஸ்தல ஸ்தாபன சட்டம் 208 செக்ஷன் (3) உட்பிரிவின்படி தெளிவாக இருக்கிறது என்று ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டார். அந்த ரிகார்டுகள் பிரதிவாதியின் வசம் இருந்ததைப்பற்றி சந்தேகம் இருக்கிறது என்ற ஆக்ஷேபனைக்கு கீழ்கோர்டில் தாக்கல் செய்யப்பட்ட வாதியின் நோட்டீசும் அதற்கு பிரதிவாதி வக்கீல் மூலம் அனுப்பிய பதில் நோட்டீசும் இதைக் குறித்து பிரஸ்தாபமிருப்பதாகவும், அது பதில் நோட்டீசில் மறுக்கப்படவில்லை என்றும், ஆகையால் பிரதிவாதியிடம் இருந்திருக்க வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார்.

கடைசியாக, அப்படி ரிகார்டுகளைக் கொடுக்கத்தவறியது ஸ்தல ஸ்தாபன சட்டம் 203 (3) செக்ஷன்படி குற்றமே தவிர இந்திய பினல்கோடு 175வது செக்ஷன்படி குற்றமாகாது எனவும், ஸ்தல ஸ்தாபன சட்டப்படி குற்றம் சாட்டுவதற்கு முன்பாக கவர்மெண்டாரின் அங்கீகாரம் முதலில் தேவை என்றும், அதைப்பெறாத காரணத்தால் தண்டனை விதிக்க முடியாது என்று வாதிக்கப்பட்டது.

ஆனால் இந்த ஆக்ஷேபனைக்கு, எந்தந்த செய்கைகள் இரண்டாவது அதற்கு மேற்பட்ட சட்டங்களின் கீழ் குற்றமாக கருதப்படுகின்றனவோ, அதற்காக குற்றம் செய்தவர்மேல் எந்த சட்டத்தின் கீழாகிலும் வழக்கு தொடரலாம். ஆனால் ஒரே குற்றத்திற்கு இரண்டு தண்டனை மட்டும் கூடாது, என்பதாக சட்டம் இருப்பதாகச் சொல்லப்பட்ட சமாதானத்தை ஜட்ஜ் ஏற்றுக்கொண்டு, இந்த வழக்கில் சப் மாஜிஸ்ட்ரேட்டுக்கு தண்டனை விதிக்க அதிகாரம் உண்டு என்று தீர்ப்பளித்தார்.

அப்பீல் அனுமதிக்கப்பட்டு வழக்கு மீண்டும் புனர் விசாரணைக்கு கீழ்கோர்டுக்கு அனுப்பப்பட்டது.

# சென்னை மாகாணத்தில் விவசாய நிலைமை

மாகாண விவசாய இலாகாவின் இவ்வருஷத்திய செலவு 24.2 லக்ஷ ரூபாய்கள் சென்ற வருஷம் 18.7 லக்ஷம் ரூபாய்.

அகில இந்திய விவசாய ஆராய்ச்சி கௌன்சிலின் உதவி பெற்றும், இந்திய மத்திய பருத்தி கமிடியின் உதவி பெற்றும், பயிர் செய்தல், பூச்சிகளையும், வியாதிகளையும், போக்குதல் புஞ்சை பயிர் அபிவிருத்தி சேகரித்து வைக்க வசதிகளைக் குறித்த பிரச்னைகள், இவைகளையெல்லாம் குறித்து ஆலோசிக்க 19 ஆராய்ச்சி திட்டங்கள் நடத்தப்பட்டன. செங்கல்பட்டு, வடஆற்காடு, சித்தூர் ஜில்லாக்களில் பயிர் செய்யப்படும் நெல்வகைகளை விருத்தி செய்ய செங்கல்பட்டு ஜில்லாவில் திரூர் குப்பத்தில் ஒரு ஆராய்ச்சி பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. மற்றொரு நெல் பண்ணை தென் கன்னட ஜில்லாவில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் இந்த இலாகா மேன்மையானதும், 10 சத விகிதம் முதல் 25 சத விகிதம் அதிகப்படியான விளைச்சல் கிடைப்பதுமான 94 விதமான நெல் வகைகளை விநியோகித்திருக்கிறது. இனைகளில்கூட மேன்மையான ரகங்கள் பரீக்ஷித்து எடுக்கப்பட்டிருக்கின்றன. குறுகிய கால அளவில் அதிக விஸ்தீரண நிலத்தை உழுது, பயிர் செய்ய மோடார் ட்ராக்டர் (Tractors) களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. பட்டுக்கோட்டை, விசாகபட்டணம் ஜில்லாவில் அரகு பள்ளத்தாக்கு, வைநாடு, இவ்விடங்களில் நிலங்களை சீர்படுத்தி பயிர் செய்ய பெரிய திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. நிலங்கள் தூர்ந்துபோவதை தடுக்கவும்—முக்கியமாக சீடெட் ஜில்லாக்களில்—திட்டங்கள் யோசிக்கப்பட்டு வருகின்றன. சென்ற வ்ருஷம் 6,000 ஏகராவுக்கும், இவ்வருஷம் 25,000 ஏகரா பூமிக்கு, ஈரத்தை நீடித்திருக்கும்படி செய்ய கரை கட்டப்பட்டது.

யுத்த காரணமாக விவசாய மார்கெட்டு ஏற்பாடுகள் பாதிக்கப்பட்டன. சென்னை வியாபார பயிர் மார்கெடிங் சட்டப்படி, கட்டுப்பாடுபடி மார்கெடிங் ஏற்பாடு திருப்திகரமாகவே நடந்து வந்தது. அதிக ஆகார உற்பத்திக்காக முயற்சி செய்ததோடு இந்த இலாகா யுத்தத்திற்கு அவசியமான ரப்பர் விஷயமாக ரப்பர் செடிகளின் அபிவிருத்தியும், உபயோககரமான மருந்து வகைகள் உற்பத்தி செய்வதைபற்றியும் வேலை செய்து வந்தது.

சுத்தமான விதைகளை வழங்க, வடக்கிலும், தெற்கிலும், டெல்டா ஜில்லாக்களில் இந்தியா கவர்மெண்டு, அகில விவசாய ஆராய்ச்சி கௌன்சில்—இவைகளின் கொஞ்சம் உதவிபெற்று விதை பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதுவரையில் 85 லக்ஷ பவுண்டு சுத்தமான நெல் விதை விநியோகிக்கப்பட்டது. சென்ற வருஷம் கொடுக்கப்பட்டது 55 லக்ஷம் பவுண்டுகள். நீலகிரியில் உருளைக்கிழங்கு பயிர் செய்யப்பட்ட பூமி 17,400 ஏகராக்களிலிருந்து 18,000 ஏகராக்களாக அதிகரித்திருக்கிறது. விசாகபட்டணம், நீலகிரி, ஹோசூர், இவ்விடங்களில் ராணுவத் தேவைக்காக இங்கிலீஷ், உள்நாட்டு காய்கறிகள் பயிர் செய்ய பிரத்தியேக திட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன.

இலாகாவின் வேலை இவ்வருஷம் திருப்திகரமாகவே நடந்திருக்கிறது. ஆனால் அதுபோதும் என்று இருக்கக்கூடாது. அதிக ஆகார உற்பத்தி இயக்கத்தை அனுசரித்து, மேன்மையான விதைகள், எருவு, விவசாய கருவிகளுக்காக எஃகு, இரும்பு, இவைகளின் விநியோகத்தை கவனித்து, சரிவர நடத்த செலவுக்காக விவசாய டைரக்டரிடம் சுமார் ஒரு கோடி ரூபாய் கொடுக்க கவர்மெண்டார் ஒரு சாசுவத அட்வான்ஸ் நிதி ஏற்படுத்த இப்போதுதான் அனுமதித்திருக்கிறார்கள்.

# குடியேறும் சங்கங்களுக்கு அதிக உதவி.

---

சொந்தமாக நிலமில்லாத ஏழை ஜனங்களை அதிக அங்கத்தினராகக் கொண்ட கோவாபரேடிவ் விவசாய சங்கங்களுக்கு கொடுத்து வந்த உதவியை அதிகரிக்க நிச்சயித்து கவர்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். அதன் விவரமாவது :

1. முதல் வருஷத்திற்கு மாத்திரம் இனமாக ஒரு ஏகராவுக்கு எருவுக்காக 5 ரூபாய் கொடுக்கப்படும். ஆனால் புஞ்சை தோட்ட பூமிகளுக்கு ஏகராவுக்கு 10 ரூபாய் வரையில் கொடுக்கப்படும்.

2. அந்தந்த பண்ணையின் விவசாய டெமான்ஸ்ட்ரேட் சிபார்சு செய்தால், நஞ்சை நிலங்களுக்கு முதல் வருஷம் 2 ரூபாய் மதிப்பு வரையில் விதை இனமாக கொடுக்கப்படும்.

3. ஒரு ஜதை 250 ரூபாய்க்குமேல் போகாமல் நல்ல எருதுகள் வாங்கி டை சங்கங்களுக்கு கொடுக்கப்படும். பாதி கிரயம் கவர்மெண்டும், மற்ற பாதியை வாங்கும் அங்கத்தினரும் கொடுக்கவேண்டும். தேவையானல் அதற்காக அந்த அங்கத்தினருக்கு கடன் கொடுக்கப்படும். அவைகளை பெற்றுக்கொள்ளும் அங்கத்தினர் அவைகளை சரிவர காப்பாற்றினல் இரண்டு வருஷத்திற்குப்பின் அவருக்கே அது சொந்தமாகிவிடும்.

இதைப் பெறுவதற்கு ஒரு நிபந்தனை என்னவென்றால் அந்த அங்கத்தினர், எருதுகள் தேவையாக இருக்கும் இதர அங்கத்தினர்களுக்கு அவைகளை வாடகைக்கு கொடுக்கவேண்டும்.

கடன் வாங்கும் அங்கத்தினர்களுக்கு கடனுக்கு ஈடாக தகுந்த பொறுப்பு கொடுக்க சக்தியில்லாமலிருக்குமாகையால், அதனல் அவர்கள் கடன் பெறுவது தடைபடாமலிருக்கும்படி பிரத்தியேகமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சலுகைகள் எல்லாம் பூரணமாகவும் அநேகமாக பூர்த்தியாகவும் பயிர் செய்யும் நிலமைக்கு சீர்படுத்தப்படாத குடியேற்ற நிலங்களுக்குத்தான் காண்பிக்கப் படும். ஆனல் ஏற்கனவே கடன் வாங்கி நிலங்களை சீர்படுத்தியிருக்கும் ஸ்தாபனங் களுக்கும் இச்சகாயம் செய்யப்படலாம்.

கருவிகள் வாங்க ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுத்துவந்த திரவிய சகாயம் 17 ரூபாயிலிருந்து 75 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு வட்டி கிடையாது. 15 வருஷ தவணைகளில் திருப்பிக்கொடுக்கலாம்.

நிலத்தை சீர்படுத்த, ஏகராவுக்கு 25 ரூபாய்க்குமேல் போகாமல் அதன் செலவில் பாதி தொகை கொடுக்கப்படும். அதற்கு வட்டியில்லை. 10 வருஷ தவணை களில் திருப்பிக் கொடுக்கலாம்.

சங்கங்களில் நித்தியப்படி வேலைகளை கவனித்து அங்கத்தினர்களுக்கு வழி காட்ட, விவசாய டிமான்ஸ்ட்ரேடருக்கு சகாயமாக, தேவையான இடங்களில் விவசாய மேஸ்திரிகள் நியமிக்கப்படுவார்கள்.

முதல் மூன்று வருஷங்களுக்கு நிலவரி, தண்ணீர் தீர்வை முதலியவை கிடையாது. அவசியமானல் அதற்குப்பின் அதுபற்றி தீர்மானிக்கப்படும்.

குடிசைத் தொழில்கள் ஏதாவது ஆரம்பிக்கப்பட்டால், அவைகளுக்கு திரவிய சகாயம் கோரப்பட்டால், கவர்மெண்டார் கவனிப்பார்கள்.

---

# சென்னை பட்ஜெட் குறிப்புகள் (1944-45)

பட்ஜெட் கணக்குபடி வருமானம் 30 கோடியே 20 லக்ஷ ரூபாயும், செலவு 23 கோடி 75 லக்ஷம் ரூபாய். நிகர மிச்சம் 6 கோடி 44 லக்ஷம் ரூபாய். இந்த தொகையிலிருந்து 1944-45 இல் செய்யப்பட வேண்டியதாக ஏற்றுக்கொள்ளப் பட்ட திட்டங்களுக்கான செலவு தொகை 89 லக்ஷம் ரூபாய். இதில் ஸ்தல ஸ்தாபனங் களுக்கு கொடுத்து உதவப்படும் தொகை 56 லக்ஷம் ரூபாய்.

ஸ்தல ஸ்தாபனங்களின் செல்வ நிலைமை திருப்திகரமற்றதாக இருப்பதாலும், ரோட்டு போடுவது இன்னும் இதர முக்கிய வேலைகளுக்கு அதிக பணம் தேவை யாக இருப்பதாலும் கவர்மெண்டு 1944-45 இல் அவைகளுக்கு பூரா சுங்கவரி ஈடு தொகையையும் 1943-44 இல் கொடுக்கப்படாமல் நிறுத்தப்பட்ட மிச்ச தொகையையும் கொடுக்க தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கு தொகை 45 லக்ஷம் ரூபாய்.

* * *

கல்வி.

கல்வி இலாகா புதிய திட்டங்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை 12 லக்ஷம் ரூபாய். தொழில் கல்வி பயிற்சி சென்னை யூனிவர்சிடியில் கொடுக்க ஏற்பட்டிற்கும் புதுபள்ளிக்கூடங்கள், பெண்களுக்கு ஹாஸ்டல், மகமத்திய காலேஜில் இஸ்லாமிய சரித்திரத்தில் ஹானர்ஸ் வகுப்பு, இரண்டர்மீடியட்டில், இயற்கை சாஸ்திர வகுப்பு, மங்களூர் முஸ்லிம் பெண்கள் பள்ளிக்கூடத்தில் மேல் வகுப்புகளும், ஹாஸ்டலும், கிழக்கு கோதாவரி பிரதேசத்தில் கோயா சிறுவர்களுக்கு கல்வி வசதிகளும், செகண்டரி உபாத்தியாயர் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதை மறுபடி ஆரம்பிப்பதும், சகாயம் செய்யப்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களுக்கு பஞ்சப்படி 3 ரூபாயிலிருந்து 4 ஆக கொடுக்க பஞ்சாயத்துகளுக்கு திரவிய சகாயமும், இவையெல்லாம் இத்தொகையி லிருந்து கொடுக்கப்படும்.

பஞ்சாயத்தார்கள் பயிற்சியளிக்க சென்னை மாகாண கோஆபரேடிவ சங்கத் திற்கும், இன்னும் சில இதர ஸ்தாபனங்களுக்கும் சகாயம் செய்ய 19 லக்ஷ ரூபாய்.

லேபர் இலாகாவிற்கும், அதன் பள்ளிக்கூடங்களில் படிக்கும் எல்லா மாணவர் களுக்கும் மத்தியான சாப்பாடு அளிக்க ரூபாய் 2 லக்ஷம். யுத்தத்திற்குப்பின் நிர்மாணவேலைகளுக்காக ரெவினியூ ரிசர்வு பண்டுக்கு மாற்றப்பட்ட தொகை 554 லக்ஷ ரூபாய். கடைசியாக மிச்சப்படுவது முக்கால் லக்ஷம் ரூபாய்.

ஆனால் பட்ஜெட்டில் போட்ட திட்டத்திற்கு அதிகமாகவே செலவு ஆகலாம் என்பதில் சந்தேகமில்லை.

ரெவினியூ ரிசர்வு பண்டில் இருக்கும் தொகையை கவர்மெண்டார் பலவேறு நிர்மாண வேலைகளைச் செய்யவும் இன்னும் இதர திட்டங்களை நிறைவேற்றவும் உபயோகிக்க உத்தேசித்திருக்கிறார்கள்.

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

---

**கீழ் பவானி பாசன திட்டம்.**

கவர்மெண்டு அறிக்கை கூறுவதாவது:—நீர்பாசன பிரதம இஞ்சனீயர் தயாரித்திருக்கும் கீழ் பவானி பிரதேசத்தில் பருத்தி பயிர் செய்வதற்கான திருத்தப் பட்ட திட்டத்தில் விவசாய சம்பந்தப்பட்ட அம்சங்கள் விவரமாக உடனே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

* * *

**சென்னைக்கு மோடார் "ட்ராக்டர்கள்".**

அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் குத்தகை கடன் ஏற்பாட்டின்படி சென்னை கவர்மெண்டார் விவசாய இலாகா உபயோகத்திற்காக எல்லா சாமான்களுடன் நான்கு மோடார் டிராக்டர்கள் (Tractor) வாங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவை சமீபத்தில் இங்கு வரும். அதிக ஆகார உற்பத்தி திட்டம் நடத்தவும், யுத்தத் திற்குப்பின் விவசாய அபிவிருத்திக்காகவும் இவை உபயோகப்படுத்தப்படும். இவை களின் விலை சுமார் 28,000 ரூபாய்.

* * *

**ஆரம்பக் கல்வியில் பின்னடைந்திருக்கும் ஜில்லாக்களுக்கு உதவி.**

ஷை ஜில்லாக்களில் அதிக உபாத்தியாயர்கள் நியமித்து ஆரம்பக் கல்வியை விருத்தி செய்வதற்காக ஒரு பிரத்யேக உதவி கவர்மெண்டால் கொடுக்கப்படும். சேலம், அனந்தபூர், பெல்லாரி, கர்நூல், சித்தூர், கடப்பை, கிழக்கு கோதாவரி ஜில்லாக்களுக்கு உதவியளிக்கப்படும். இதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தொகை 3½ லக்ஷ ரூபாய்.

* * *

**புளிய மரங்கள் நடுவதற்கு உதவி.**

சென்னை கவர்மெண்டு அறிக்கை கூறுவதாவது:—புளி உற்பத்தி தடை படாமலிருக்க கவர்மெண்டார் 1943ம் வருஷம் ஏப்ரல் மாதம் கவர்மெண்டு காடுகள், இதர காடுகள், கால்வாய் ஓரங்கள், இதர கவர்மெண்டு நிலங்கள் பஞ்சாயத்து காடுகள் இவைகளிலிருக்கும் புளி கொடுக்கும் மரங்களை வெட்டக்கூடாது என்று தடை செய்திருக்கிறார்கள். மேலும் வருங்காலத்தில் புளி உற்பத்தியை அதிகப் படுத்த கவர்மெண்டார் எல்லா பொரம்போக்கு நிலங்களிலும், குளக்கரைகளிலும், அந்தந்த ஜில்லா மகாநாட்டுடன் கலந்து மரங்கள் நடுவதற்கு ஒவ்வொரு கலெக்டர் வசமும்—சென்னை கலெக்டர் நீங்கலாக—500 ரூபாய் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. போர்டு ஸ்டாண்டிங் உத்திரவு 19-Bபடி குடிகளுக்கு பொரம்போக்குகளில் புளியஞ்செடி நடுவதற்கு அனுமதி கொடுக்கப்படும்.

* * *

**கையால் காகிதம் தயார் செய்யும் தொழிலுக்கு சகாயம்.**

அகில இந்திய விஷயமாய் கையால் காகிதம் செய்வதற்கு சகாயம் செய்ய ஒரு சரியான திட்டம் கவர்மெண்டு வகுத்திருக்கிறார்கள் என்று சர் ராமசாமி முதலியார்

தெரிவித்தார். இதன்படி உற்பத்தி செய்யப்படும் காகிதங்களை கவர்மெண்டாரே வாங்க முன்வருவார்கள் என்று உறுதி கூறப்பட்டது. மேலும் தொழில் நிபுணர் களின் உதவி தேவையாக இருந்தாலும் அது கொடுக்கப்படும். மாகாண சர்க்கா ருக்கு சம்பந்தப்பட்ட இத்தொழிலுக்கு எல்லா மாகாண சர்க்கார்களும் எல்லா விதமான உற்சாகமும் உதவியும் கொடுக்கிறார்கள் என குறிப்பிட்டார்.

* * *

**இழந்த நிலங்களை திரும்பி அடைய உதவி.**

அகில இந்திய விவசாய ஆராய்ச்சி கௌன்சில் திரவிய சகாயம் செய்வதாக ஒப்புக்கொண்ட பரோடா சமஸ்தானத்தின் ஆதரவுடன் வெளியாகியிருக்கும் மசோதா திட்டம் என்னவென்றால், பண லேவாதேவிக்காரர்கள் கையில் கிடைத் திருக்கும் சில கிராமங்களை அவர்களிடமிருந்து மறுபடியும் வாங்கி அவைகளை அவை களின் ஆதி சொந்தக்காரர்கள் கையிலேயே ஒப்படைப்பது. மேலும் அந்நிலங்களில் நவீன விவசாய முறைகளில் பயிர் செய்து பரிசோதனை செய்து பார்ப்பது. ஒரு இடத் தில் குடிகளுக்கு ஒரே விஸ்தாரமான நிலம் கொடுக்கப்படும். இன்னொரு கிராமத்தை கவர்மெண்டு பண்ணையாக நடத்தி, குடிகளை கூலிக்காகவும் லாபத்தில் பங்கடைந்தும் வேலை செய்யச் சொல்லுவது, இன்னும் சில பிரதேசங்களில் ஒன்று சேர்ந்து பயிர் செய்யப்படும் இன்னும் சில பிரதேசங்கள் கூட்டுமுறையில் பயிர் செய்யப்படும்.

* * * *

**ஸ்தல ஸ்தாபனங்களுக்கு பண உதவி.**

சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட மசோதாவின்படி அதிக வரிகள் விதித்தும், எந்த முனிசிபாலிடியாவது, ஜில்லா போர்டாவது, பஞ்சாயத்தாவது தங்கள் சிப் பந்திகளுக்கு பஞ்சப்படி கொடுக்க போதுமான பணம் இல்லாமலிருந்தால், அவை களுக்கு மாகாண நிதியிலிருந்து திரவிய சகாயம் செய்ய தீர்மானித்திருப்பதாக, சென்னை சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

# மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியயன்னா, பி.ஏ., பி.எல்., 187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும் சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில் மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

வாங்க களின்

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடெண்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | 1,30,00,000. |
| க்ஷேமநிதி | — | 10,00,000. |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்**, எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.